# திரு சேஷாசலம் செட்டியாரின் வாழ்வும் நெறியும்



திரு. சேஷாசலம் செட்டியார்



திரு. தனலட்சுமி அம்மாள்

ஆக்கம்

சேவாரத்னம்
மோதி எஸ். இராஜகோபால்

மேனாள் செயலர்
உருமு தனலட்சுமி கல்லூரி நிர்வாகக் குழு
திருச்சிராப்பள்ளி-19.

Scanned with OKEN Scanner

# திரு சேஷாசலம் செட்டியாரின் வாழ்வும் நெறியும்

ஆக்கம்

**சேவாரத்னம்**

**மோதி எஸ். இராஜகோபால்**

மேனாள் செயலர்

உருமு தனலட்சுமி கல்லூரி நிர்வாகக் குழு

திருச்சிராப்பள்ளி - 19



Scanned with OKEN Scanner

## நூலைப் பற்றி...

தலைப்பு : திரு **சேஷாசலம் செட்டியாரின் வாழ்வும் நெறியும்**

ஆசிரியர் : **சேவாரத்னம் மோதி எஸ். இராஜகோபால்**

மொழி : தமிழ்

பதிப்பு : முதல்பதிப்பு
நவம்பர் 17, 2012

தாள் : 14.4 வெள்ளைத்தாள்

அச்சிட்டோர் : **ஸ்ரீ சாரதா பிரிண்டர்ஸ்,**
31, மேலதேவதானம்,
திருச்சிராப்பள்ளி-2.
செல் : 99940 48313.



Scanned with OKEN Scanner

# திரு சேஷாசலம் செட்டியாரின் வாழ்வும் நெறியும்

**பிறப்பு :**

நம் கல்லூரியின் நிறுவனர் திரு சேஷாசலம் செட்டியார் அவர்கள் ஆந்திர மாநிலத்தில் நெல்லூருக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூரில் எளிமையான குடும்பத்தில் பிறந்தார். இளம் வயது முதலே எதையாவது சாதிக்க வேண்டுமென்கிற துறுதுறு இளைஞராகவே செயல்பட்டார். தம் ஏழாவது வயதில் நெல்லூரில் உள்ள சைக்கிள் கடையில் வேலைக்குச் சேர்ந்தார். மாதம் ரூ.1.50/- (ஒன்றரை ரூபாய்) சம்பளம் பெற்றார். பின்னர் ரூ.7/- (ஏழு ரூபாய் வரையிலான சம்பள உயர்வைப் பெற்றார்.

**சென்னை வருகை :**

இந்நிலையில் திரு சேஷாசலம் செட்டியார் சென்னைக்கு வந்தார். ஒரு ஜவுளிக்கடையில் வசூலுடன் கூடிய கணக்குப்பிள்ளை வேலை பார்த்தார். அதன் பின்னரே எழுதவும், படிக்கவும் கற்றுக்கொண்டார். சில காலத்திற்குப் பிறகு ரூ.100, 200 என்று ரூபாய் 350/- வரை ஊதிய உயர்வும் கிடைத்தது. மேலும், திரு சேஷாசலம் செட்டியார் அவர்கள், சென்னைத் துறைமுகத்தில் கப்பலில் சுருட்டு வியாபாரம் செய்தார்.



Scanned with OKEN Scanner

அப்போது, வியாபாரப் போட்டியின் காரணமாகச் சிலர் இவரிடம் உள்ள சுருட்டை பிடுங்கிக் கடலில் வீசி விடுவர். எதிர்த்துப் போராட முடியாத நிலையில் வியாபாரத்தில் மந்த நிலை ஏற்பட்டது. அதனால் கிராமஃபோன் பெட்டி வியாபாரம் செய்தார். பின்னர் அந்த வியாபாரமும் அவ்வளவு சரியாக இல்லாத காரணத்தால் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தார்.

**திருச்சி வருகை :**

சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி வந்த திரு சேஷாசலம் செட்டியார் ஒரு சைக்கிள் கடையில் சம்பளத்திற்கு வேலை பார்த்தார். பின்னர் திரு P.R. நாராயணசாமி அய்யருக்கு ஜவுளி வியாபாரம் தொடங்க வழிகாட்டியாக இருந்தார். திரு நரசிம்ம செட்டியாரும், திரு J. இராமானுஜம் செட்டியாரும் கடையைத் தொடங்கி வைத்தனர். முன்பு வேலை பார்த்த ஜவுளிக்கடைக்காரர்களே (கடை முதலாளிகள்) சரக்கு (ஜவுளி) கொடுத்து ஜவுளி வியாபாரத்திற்கு உதவி புரிந்தனர். சென்னையில் கொள்முதல் செய்து திருச்சியில் வியாபாரம் செய்தார்.

Ford V8 மற்றும் ஆஸ்டின் கார்களை வைத்திருந்தார். காரில்தான் சென்னைக்கும், திருச்சிக்கும் பயணம் செய்தார். குப்புசாமி நாயுடு என்பவரை டிரைவராக வைத்திருந்தார். ஜவுளி வியாபாரத்தின் மூலம் பெரும் செல்வத்தை ஈட்டினார். அந்தச் செல்வத்தின் மூலம் சொத்துக்களை (நிலம், வீடு) வாங்கிப் போட்டார்.

**குடும்ப உறவுகள் :**

திரு சேஷாசலம் செட்டியார்க்கு ஓர் அண்ணன் இருந்தார். அவர் பெயர் குருவப்பச் செட்டியார். இவரின் இரண்டாவது மகன் ஜெகநாதன் செட்டியார். இவரைதிரு சேஷாசலம் செட்டியார்தான் குழந்தைப் பருவத்திலிருந்தே வளர்த்து வந்தார். தனக்குப் பிள்ளை இல்லை என்கிற காரணத்தினால் திரு ஜெகநாதன் செட்டியாரை (தன் அண்ணன் மகன்) 1946-இல் சுவீகார புத்திரனாகத் தத்தெடுத்தார். பின்னர் காஞ்சிபுரத்தில் கொல்லா வகையறா வெங்கட கண்ணையன் செட்டியாரின் மூத்தமகளை திரு ஜெகநாதன் செட்டியாருக்குத் திருமணம் செய்து வைத்தார். திரு ஜெகநாதன் செட்டியார் இளநிலைப் பட்டதாரி. அவரைப் படிக்க வைத்தவர் திரு சேஷாசலம் செட்டியார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் சில காலம் சென்று 1952-இல் தன் வளர்ப்பு மகனான ஜெகநாதன் செட்டியார் மறைந்தார். வளர்ப்பு மகன் மறைவால் மனம் தளர்ந்தார். தான் தொடங்கிய பள்ளியில் மாணவர்களுடனேயே தங்கினார்.

திரு ஜெகநாதன் செட்டியாரின் மறைவிற்குப் பின்னர் அவரின் மனைவி காஞ்சிபுரத்திற்கே சென்று விட்டார். அவருக்கு மாதம் நூறு ரூபாய் அனுப்பிக் கொண்டிருந்தார். திரு சேஷாசலம் செட்டியாரின் வாழ்விற்குப் பின்னரும், இந்தப் பணம் தொடர்ந்து



Scanned with OKEN Scanner

அனுப்பப்பட வேண்டும் என்று செட்டில்மெண்ட் எழுதப்பட்டது. இந்த செட்டில்மெண்டில், திரு ரெங்கநாதன் என்பவரின் தாயார் திருமதி பாக்கியலெட்சுமி அம்மாளுக்கும் மாதம் பத்து ரூபாய் தர வேண்டும் என்றும் எழுதப்பட்டது. அதன்படி அவருக்கும் மாதம் பத்து ரூபாய் தரப்பட்டு வந்தது.

திரு சேஷாசலம் செட்டியாரின் அண்ணன் குருவப்பச் செட்டியாரின் முதல் மகன் பாலகுருவப்ப செட்டியார். அவரின் ஒரே மகள்தான் ரெங்கநாதன் செட்டியாரின் துணைவியார்.

திரு குருவப்பச் செட்டியார் சென்னையில் உள்ள Accountant General Office-இல் வேலை பார்த்தார். பின்னர் பணி ஓய்விற்குப் பிறகு Oriental Benefits & Deposit Society - யில் Key Guardian என்கிற கௌரவ வேலையில் இருந்தார்.

திரு சேஷாசலம் செட்டியாரின் சகலை மகன் திரு கிருஷ்ணமூர்த்தி செட்டியார். இவர் திரு R.P. சீனிவாசன் & கணபதி என்பவரின் பாட்டனார் ஆவார். அவர்களின் தாயார் திருமதி R.P. சுலோச்சனா அம்மையார். இவரின் தாயார் திருமதி சுப்புரெத்தினம் அம்மாள். இவரின் தந்தையார் எக்கலூர் கோபால் செட்டியார். இவரின் தந்தையார் திரு சுப்பிரமணிய செட்டியார். இவருடன் பிறந்தவர்கள் நான்கு பேர்.

நால்வரில் தனலட்சுமி அம்மாளும் ஒருவர். மற்ற மூவர் திருமதி பாலகிருஷ்ணம்மாள், மகாலெட்சுமி அம்மாள், திரு இராமசாமி ஆகியோராவர்.

திரு கோபால் செட்டியாருக்குச் சொந்த ஊர் சென்னை. இவரது தொழில் வைர வியாபாரமாகும். இவர்கள் சென்னையில் உள்ள கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் வசித்து வந்தனர்.

இந்நிலையில் திருமதி. R.P. சுலோச்சனா அம்மாளின் தந்தை வழிப்பாட்டனார் இராமசாமி செட்டியாரின் தந்தை கிருஷ்ணசாமி செட்டியார் ஆவார். இவர் இராணுவத்தில் பொறியாளராகப் பணியாற்றினார்.

திரு கிருஷ்ணசாமி செட்டியார் அவர்கள், சென்னை பூந்தமல்லி ஹைரோட்டில் 7x2400 சதுர அடி நிலத்தை (Seven Ground) பூந்த மல்லியில் உள்ள "Board High School" என்ற பள்ளிக்குத் தானமாகக் கொடுத்திருக்கிறார். இது எந்தவித எதிர்பார்ப்புமின்றி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலப்பதிவிற்கான செலவையும் இவரே கொடுத்திருக்கிறார்.

இந்தப் பெருமைக்குரிய செயலைக் கண்ட திருமதி தனலட்சுமி அம்மாள் தன்னுடைய நகைகளையெல்லாம் விற்று பள்ளி தொடங்க விரும்பினார். உடல்நிலை சரியில்லாமல் படுக்கையில் இருந்தபோது சுவிகாரப்புத்திரனான ஜெகநாதன்

செட்டியார் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார். அதற்குத் தனலட்சுமி அம்மாள் ஏழைப் பிள்ளைகளின் கல்விக்கு உதவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன்பின்னரே, 1940-இல் இன்றைய உருமு தனலட்சுமி வித்யாலயா வேறொரு நிர்வாகத்திடமிருந்து பெறப்பட்டது.

திரு சேஷாசலம் செட்டியார் சுவிகாரப் புத்திரன் திரு ஜெகநாதன் செட்டியாரின் மறைவிற்குப் பின் கல்வி நிறுவனம், தர்மஸ்தாபனம் ஆகியவற்றில் கவனம் செலுத்தினார். திரு P.R. நாராயணசாமி அய்யரும், திரு சேஷாசலம் செட்டியாரும் கல்விநிறுவனம் மற்றும் தர்மஸ்தாபனங்கள் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் E.R. நடராஜ அய்யர் அங்கு வந்தார். அவர் (நடராஜ அய்யர்) தான் நடத்திய பள்ளியை திரு சேஷாசலம் செட்டியாருக்குக் கொடுத்து (உயர்தொடக்கநிலைப்பள்ளி) நடத்த வைத்தார். உருமு தனலட்சுமி வித்யாலயா பள்ளியை நிறுவி, தாளாளர் (Correspondent) E.R. நடராஜ அய்யர் சிபார்சில் அடுத்து சுந்தரேசய்யர் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். 1941இல் உருமு தனலட்சுமி வித்யாலயா பள்ளியும் 1946ல் ஆதரவற்றோர் இல்லமும் தொடங்கப்பட்டது. உருமு சேஷாசலம் செட்டியார். அரசு மருத்துவ மனையிலிருந்து தாய் தந்தையற்ற ஒரு தாழ்த்தப்பட்ட (SC) வகுப்பைச் சார்ந்த ஒரு சிறு குழந்தையைத் தத்து எடுத்து அதன்மூலம் ஆதரவற்றோர்



Scanned with OKEN Scanner

இல்லத்தை நிறுவினார். அந்தக் குழந்தைக்கு பத்ரி நாராயணன் என்று பெயர் சூட்டினார். அதன்பின்னர் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்று இருநூறை எட்டியது. அந்த இருநூறு மாணவர்களுக்கும் ஒன்றாம்வகுப்பு முதல் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு வரையிலும் உணவு, உடை, உறைவிடம் அளித்து ஆதரவளித்தார். சுமார் எழுபது ஏக்கர் நன்செய் நிலத்துக்கு உரியவர். மிகப்பெரிய நிலக்கிழாராக விளங்கினார். ஏறக்குறைய அறுபது குடும்பங்களுக்கு குறைந்த வாடகைக்கு வீடு கட்டிக் கொடுத்தார். தினந்தோறும் பரதேசிகள், பிச்சைக்காரர்கள், 10 பேர்களுக்குப் பெரிய கடைவீதியில் இருக்கும் கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோயில் நவகிரக நாயகர்களுக்கு நைவேத்தியம் செய்த அன்னத்தைப் பசியாறும் அளவிற்கு அளித்தார்.

தள்ளாத வயதிலும் விடுதி மாணவர்களுடன் விடுதிக் கட்டிடத்திலும், பள்ளிக் கூடத்தில் கட்டிடம் கட்டும் பணியிலும் செங்கல்லை சுமந்து சித்தாளைப்போல் வேலை செய்தார். 1952-ஆம் ஆண்டு அறக்கட்டளை நியமனம் செய்தார். 1953-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கௌசிக ஏகாதசி அன்று காலை 6 மணிக்கு அமரரானார்.

திரு சேஷாசலம் செட்டியார் அவர்கள் 1940-ஆம் ஆண்டிலிருந்து தொடக்கப் பள்ளியாக இருந்ததைத் தம்பொறுப்பில் ஏற்றுக்

கொண்டார். புதிய கட்டிடத்திற்கு அந்நாளைய சென்னைமகாண முதலமைச்சர் சக்கரவர்த்தி இராஜகோபாலச்சாரியார் அவர்களை அழைத்து அடிக்கல் நாட்டச் செய்தார்.

## வியாபார நுட்பம் :

திரு சேஷாசலம் செட்டியார் சைக்கிள் கடையும், ஜவுளிக்கடையும் நடத்தினார். வியாபாரத்தில் கறாராக இருப்பார். விலையில் குறைக்க மாட்டார். பில்லில் கூடுதல், குறைவு என்பதெல்லாம் இருக்காது. பள்ளிச் சீருடைக்குப் பணம் கொடுத்துத் தைத்துக் கொள்ளச் சொல்வார். கடையிலிருந்து இலவசமாகத் தரமாட்டார்.

அவரைப் பொருத்தவரை தன் கடை இருக்கிற பகுதியில் நிறைய கடைகள் இருக்கவேண்டும். மற்றவர்களுக்கும் நல்ல முறையில் வியாபாரம் நடைபெற வேண்டும். அவர்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நினைக்கிற குணம் படைத்தவர். மேலும், வியாபாரம் என்று வருகையில், பல வியாபாரம் செய்து அவதிப்படாமல், ஒரே வியாபாரத்தில் கவனம் செலுத்தி அதை நன்றாகச் செய்து உயர்வடைய வேண்டுமென்று நினைப்பவர்.

வருமானம் இருந்தால் மட்டுமே கடன் வாங்க வேண்டும். வட்டிக்குக் கடன் வாங்கக் கூடாது. சீசனுக்கு ஏற்ற சரக்குகள் வைத்திருக்க வேண்டும்.



Scanned with OKEN Scanner

வாடிக்கையாளர்களிடம் இனிமையாகப் பேச வேண்டும். சரக்குகள் விதவிதமாக வாங்கி வைக்க வேண்டும். சரக்குக் கொள்முதலுக்கு முதலாளியே போகவேண்டும். பணியாளர்களை அனுப்புதல் கூடாது. கிழிக்கும் பொருளாக இருந்தால் (துணி) இருபது (20%) சதவிகிதம் இலாபம் இருந்தால் போதுமானது. நிர்வாகச் செலவுக்கு ஒன்பது சதவிகிதம் (9%) இருக்க வேண்டும்.

கடை அதுவாக வளர வேண்டும். நாமாக உயர்த்த நினைத்தல் கூடாது. அப்படி நினைத்தால் சிரமங்கள் கூடும். அதனால் கூடுதலான ஆண்டுகள் வியாபாரம் செய்தால் நல்ல இலாபத்தை எட்ட முடியும். நீண்ட நாள் நீடிக்கும்.

**பள்ளி நிர்வாகம் :**

திருச்சிக்கு வந்து வியாபாரத்தில் முத்திரை பதித்து, கல்விப்பணியில் காலூன்றி வெற்றி கண்டார். இந்நிலையில் ஏதோ ஒரு சூழலில் கல்வி நிறுவனத்தை அரசிடம் ஒப்படைத்து விடலாம் என்று எண்ணினார். அந்த நேரத்தில் அவருக்கு எல்லாவற்றிலும் உறுதுணையாக இருந்த E.R. நடராஜ அய்யர் சொன்னதால், அந்த எண்ணம் கைவிடப்பட்டது. தொடர்ந்து பள்ளி நிர்வாகத்தில் கவனம் செலுத்தினார். E.R. நடராஜ அய்யரின் வழி காட்டுதலால் உருமு தனலட்சுமி வித்யாலயா, கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்கள் இன்று வரை புகழோடு



Scanned with OKEN Scanner

நிலைத்து நிற்கின்றன. UDV பள்ளியினால் அந்தப் பகுதி மக்கள் கல்விபயின்றனர். மக்களின் அன்புப் பெருக்கினால் காய்கறி வாழைத்தார், வைக்கோல் உள்ளிட்ட பலவும் சேஷாசலம் செட்டியாரைத் தேடி வந்தன. இப்படி அன்பு உள்ளம் கொண்டவர்களால் பள்ளி நன்றாக வளர்ந்தது. பள்ளியின் வளர்ச்சி கண்டு மகிழ்ச்சியடைவார் திரு சேஷாசலம் செட்டியார். பள்ளிக் கல்வி அதிகாரிகள் அவரின் நிர்வாகத் திறன் கண்டு வியந்தனர். மனம் திறந்து பாராட்டினர்.

இந்நிலையில் குழந்தைகளின் பட்டினி கண்டு உணவுடன் கூடிய கல்விதர முயற்சித்து அனாதை இல்லம் தொடங்கினார். முதலில் மதிய உணவு மட்டும் வழங்கப்பட்டது. பின்னரே தங்கிப் படிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டது. தாய் தந்தை இருந்தாலும், இறந்தாலும் பட்டினி வாழ்க்கை என்று தெரிய வந்தால் அந்தக் குழந்தைகளைப் படிக்க வைத்தார்.

**நட்பு**

திரு சேஷாசலம் செட்டியார் பலரோடு நெருங்கிப் பழகுகிற தன்மை உடையவர். இவருக்கு உத்தமர் கோயில் பகுதியைச் (திருச்சி) சேர்ந்த திரு நாராயணசாமி அய்யரின் நட்பு கிடைத்தது. இவர்தான் இவரைப் பள்ளிக் கூடம் தொடங்க அறிவுறுத்தினார். இவர் எட்டாம் வகுப்புவரை படித்தவர். அத்துடன் டைப்ரைட்டிங்கும்



Scanned with OKEN Scanner

தெரிந்தவர். பாண்டிச்சேரியில் உள்ள கோதார் மில்லில் வேலை பார்த்தார். சம்பளம் ரூ.12/- மட்டுமே. அந்த மில் தான் பின்னர் ஸ்டீல் ரோலிங் மில் என்ற பெயரில் நாகப்பட்டினத்தில் ராஜம் ஐயங்கார் என்பவரால் தொடங்கப்பட்டது.

P.R. நாராயணசாமி அய்யரின் மாமனார் சுப்பிரமணிய அய்யரின் வீடு, வரகனேரியில் வ.வே.சு. ஐயர் வீட்டிற்குப்பக்கத்து வீடு ஆகும். நல்ல அறிமுகம் இருந்ததால் தான் பாண்டியில் அரவிந்தர் ஆசிரமத்தில் P.R. நாராயணசாமி ஐயரை ஜவுளிப் பிரிவில் கணக்குப் பிள்ளை வேலைக்குச் சேர்த்து விட்டார். அதன் பிறகே P.R. நாராயண சாமி ஐயர் ஜவுளித் தொழிலைத் தெரிந்து கொண்டார். நாராயணசாமி அய்யருக்கு ஜவுளிக்கடை வைக்க மாமுண்டி கோனாரின் உதவியோடு மாடியில் இருந்த கடையை மாற்றித்தற்போதைய கடையை ஏற்பாடு செய்து கொடுத்தார். திரு செட்டியார் அவர்கள் அப்பொழுது திரு P.R. நாராயணசாமி அய்யருக்குப் பல வியாபார நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுப்பார்.

திருலோகச் சீதாராம் வீட்டில் செல்லம்மாள் பாரதியும், தங்கம்மாள் பாரதியும் தங்கி இருந்திருக்கிறார்கள். செல்லம்மாள் பாரதியை நேரில் பார்த்தவர். திரு நாராயணசாமி அய்யர். அவருக்கு பாண்டிச்சேரியில் இருந்த போதே வ.வே.சு. அய்யர்,



Scanned with OKEN Scanner

பாரதியார் இவர்களுடன் பழக்கம் உண்டு. மேலும், ஐயன் பெருமாள் கோனாருக்கும் திரு சேஷாசலம் செட்டியாருக்கும் நல்ல நட்பு இருந்தது. ஐயம்பெருமாள் கோனார் அதிகாலைப் பொழுதில் சப்தமாகத் திருப்பாவை, திருவெம்பாவை படிப்பது வழக்கம். திரு சேஷாசலம் செட்டியாருக்கு இது மிகவும் பிடிக்கும்.

## வெளி வட்டாரத் தொடர்பு

உருமு தனலட்சுமி வித்யாலயா பள்ளியில், திருச்சி எழுத்தாளர் சங்கத்தின் முதல்கூட்டம் ஆனந்தவிகடன் ஆசிரியர் தேவன் தலைமையில், கி.வா. ஜகந்நாதன் வாழ்த்துரையோடு நடைபெற்றது. எழுத்துலகப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். திருலோக சீத்தாராம், AVR. கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகியோர் கிராம ஊழியன் பத்திரிகை நடத்தினர். கு.ப. இராஜகோபாலன், எம்.பி. வெங்கட்ராமன், பிச்சை மூர்த்தி, புதுமைப்பித்தன், கா.நா. சுப்பிரமணியன் ஆகியோரும் பணியாற்றினர். இப்படி இலக்கியம், சமூகம், பத்திரிகை தொடர்புள்ள பலரோடும், அவரது நட்பு விரிவடைகிறது. கல்வி நிறுவனமும் சிறப்புடன் விளங்குகிறது.

## ஸ்தாபகரைப்பற்றி திரு ஜி.சி. பட்டாபிராம் அவர்கள்

35 வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் ஒரு பழுத்த கிழவனார் என்னிடம் தன்காருக்கு சாமான்கள் வாங்குவதற்காக வந்தார். பார்த்தால் வெகு சாதுவாக



Scanned with OKEN Scanner

தோன்றினார். என் தகப்பனார் முதலியவர்களைப்பற்றி விசாரித்தார். எங்கள் குடும்ப நண்பர் என்று சொன்னார். பிறகு தான் எனக்கு இவர் ராம் அண் கோ முதலாளி திரு உருமு சேஷாசலம் செட்டியார் என்று தெரிந்தது.

ரொம்ப சாதுவாகத்தான் இருந்தார். கனிவாகத்தான் பேசினார். அடிக்கடி பத்ரி நாராயணன் பெயரையும் சொன்னார். ஆனால் விலை விஷயம் வரும்போது ரொம்பக் கண்டிப்பாக இருந்தார். ஒரு ரூபாய் சாமானுக்குப் பத்து பைசாவுக்கு மேல் கொடுக்கமாட்டார் என்று எனக்குத் தோன்றியது. அதற்குப் பிறகு, பலமுறை பார்த்திருக்கிறேன். குழந்தை இல்லாத இவர், பணத்தை வெகு ஜாக்கிரதையாகச் சேர்த்து வருகிறார். ஒரு பைத்தியமோ என்று கூட நினைத்தேன்.

ஒரு பள்ளிகூடம், இவர் மனைவியின் ஞாபகமாகக் கட்டுவதாகவும் அதற்குப்பூஜ்யர் இராஜாஜியே வந்து அஸ்திவாரக் கல் நடப்போவதாகவும் எனக்கு அழைப்பு வந்தது. எனக்கு ஒரு ஆச்சிரியம்! இப்பொழுது தெரிந்தது இவர் யாருக்காகப் பணத்தை சேர்த்து வருகிறார் என்று. தன் குடும்பத்திற்காக அல்ல. ஏழைக் குழந்தைகளுக்காகவே கஷ்டப்பட்டுப் பணத்தைச் சேர்த்தார். என் பழைய அபிப்பிராயங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்ற வேண்டி வந்தது. பிறகு அவர் ஓர் அனாதை ஆசிரமத்தையும் ஆரம்பித்து நடத்தினார்.



Scanned with OKEN Scanner

ஏழைக் குழந்தைகளின் வயிற்றுப் பசிக்கும் அறிவுப் பசிக்கும் அன்னமிட்டுப் புண்ணிய புருஷனாக வாழ்ந்தார்.

இத்தனை வயதான பிறகும் மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் இவரே எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாரே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு நாள் எனக்கு அவரிடம் இருந்து அழைப்பு வந்தது. பல லட்சங்கள் பெறக் கூடிய தனது சொத்துக்களை ஒரு தர்ம ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அவர்களிடம் ஒப்புவித்து விடுவதாகவும் அந்த ஸ்தாபனத்தின் உபதலைவராகவும் இருக்க வேண்டும் என்று சொன்னார். எனக்கு ஒரே பிரமிப்பு! ஏனென்றால் இப்பொழுது எனக்கு யார் பைத்தியம் என்று புரிந்து விட்டது. உருமு சேஷாசலம் செட்டியார் பைத்தியமல்ல. அந்த ஸ்தாபனம் ஏற்படுத்தி அதன் தலைவர் பதவியை வகித்து ஒரே ஒரு வருஷம் தான் உயிருடன் இருந்தார். சரியாக ஒரு வருஷத்திற்குப் பிறகு அவர் இறைவனடி சேர்ந்தார்.

"***தாளாற்றித் தந்தபொருள் எல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு***"

என்ற குறள் அடிகளைப் படிக்கும்பொழுதுதெல்லாம் உருமு சேஷாசலம் செட்டியார் ஞாபகம் தான் வரும். அவர் தன் வாழ்க்கையை இக்குறளடிகள் புகட்டும் நெறியை அனுசரித்து நடத்தினார்.

இப்படிப்பட்ட தர்மவான்கள் இருப்பதால் தான் ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறையாவது பருவ மழை பெய்தது.

இவ்வாறு பன்முகப் பரிமாணம் கொண்ட திரு சேஷாசலம் செட்டியாரின் வாழ்க்கை ஏழை எளியவர்களுக்கும், சாதிக்க நினைப்பவர்களுக்கும், தொண்டாற்ற விரும்புகிறவர்களுக்கும் நல்லதொரு பாடமாக அமைந்திருக்கிறது என்றே சொல்லலாம்.

***வாழ்க சேஷாசலம் செட்டியார் புகழ்!***

***வளர்க அவரின் கல்வி நிறுவனங்கள்!***

★★★★★★★



Scanned with OKEN Scanner